அரசுத் துறைகளில் 1,55,992 பணியிடங்கள்! தனியார் துறைகளில் 2.50 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு!

9 இலட்சம் அரசு ஊழியர் குடும்பங்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்த முதல்வர்!

சட்டப்பேரவையில் - மனிதவள மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் - அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் பதிலுரை!

சென்னை, ஏப். 18-

சட்டப்பேரவையில் மனிதவள மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் திரு மதி.என்.கயல்விழி செல்வராஜ் பதிலுரையில் 9 இலட்சம் அரசு ஊழியர் குடும்பங்களின் எதிர் பார்ப்பை பூர்த்தி செய்த முதல் வர் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் மனிதவள மேலாண்மைத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் திரு மதி. என்.கயல்விழி செல்வராஜ் பதிலுரை வருமாறு:

பேரவைத் தலைவர் அவர்களே, இன் றைய திராவிட மாடல் அரசின் கொள்கை களுக்கு, அன்றே வித்திட்ட திராவிட இயக்க பெரியோர்கள் சர். பிட்டி. தியாகரா யர், டி.எம். நாயர், டாக்டர். நடேசனார், சிங்காரவேலனார், அயோத்தி தாசப்பண் டிதர், தாத்தா இரட்டைமலை சீனிவா சனார், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமி ழறிஞர் கலைஞர் உள்ளிட்ட எண்ணற்ற முன்னோர்களை நினைவு கூர்ந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்ணு ரிமை, சுயமரியாதை, சமூக நீதி இவை களை காத்திட காலமெல்லாம் காற்றாய், புயலாய் உழைத்தவர்; திராவிட இயக்கத் தின் தத்துவ மூலவர்; பகுத்தறிவுப் பகல வன் தந்தை பெரியார். இவர் பலருக்கு தலைப்பாகவும், சிலருக்கு நெருப்பாக வும், மாண்ட பின்பும் மனித மனங்களில் சிலையாகவும் வாழ்ந்து வரும் அய்யா பெரியாரை வணங்குகிறேன்! (மேசை யைத் தட்டும் ஒலி)

உரிமை இழந்து, உணர்வு மறத்து, விழுந்து கிடந்த விளிம்புநிலைச் சமூகத் தின் அடிமைப்புற்று அகற்றி, சமத்துவ இரத்தம் ஏற்றிய, சமூக மருத்துவர் தான் சார்ந்த பட்டியிலினம் மட்டுமல்ல, பரந்த இந்திய சமூகத்திற்கான அரசமைப்புச் சட் டம் தந்திட்ட, உலக சட்டமேதை டாக்டர் பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கர் அவர்களை வணங்குகிறேன்.

மக்கள் ஆகிய அனைவரையும் அன் போடு, நன்றியோடு நினைந்து வணங்கு கிறேன்.

இந்த மாமன்றத்தில் எத்தனையோ பெரும் ஆளுமைகள், அறிஞர்கள் மற் றும் தலைவர்கள் செய்திட்ட எண்ணில டங்கா சேவையை நன்றியோடு நினை வுகூர்ந்து பேரவைத் தலைவர், பேரவை துணைத் தலைவர், முதலமைச்சர், துணை முதலமைச்சர், அவை முன்ன வர், மூத்த அமைச்சர் பெருமக்கள், அரசு கொறடா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய அனைவரையும் நன்றியோடு வணங்கி, என் உரையைத் துவக்குகி றேன்.

40 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியீடு!

மே 2021 முதல், நிதிநிலை அறிக்கை, முதல்வர் அவர்களால் விதி எண் 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மற் றும் மானியக் கோரிக்கையில் வெளியி டப்பட்ட அறிவிப்புகள் என மொத்தம் 41 அறிவிப்புகளில், இதுவரை 40 அறிவிப்புக ளுக்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள ஓர் அறிவிப்புக்கு அரசாணை வெளியிடும் பொருட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

எனது தாராபுரம் சட்டமன்ற தொகுதி யில், தாராபுரம் சுற்று வட்டார விவசாயிகளின் உயிர் பிரச்சினையாக உப்பாறு ஓடையின் குறுக்கே தடுப் பணை அமைக்க ரூபாய் 7 கோடியே 98 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தும், கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி மையத்திற்கு, புதிய கட்டடம் கட்ட ரூபாய் 3 கோடி வழங் கப்படும் என்ற அறிவிப்பிற்கும், முதல மைச்சர் அவர்களுக்கும், அவை முன்ன வர் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நெஞ்சம் நிறைந்த நன்றியை எனது தொகுதி மக்க ளின் சார்பில் நெகிழ்ச்சியுடன் தெரிவித் துக்கொள்கிறேன்.

2025-2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், நிறுத்தி வைக் கப்பட்டிருந்த அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஈட்டிய விடுப்பு நாட்களில் 15 நாட்கள் வரை சரண் செய்து, பணப்ப லன் பெறுவதற்கான நடைமுறையினை மீண்டும் செயல்படுத்தி, சுமார் 9 இலட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்க ளின் எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்த முதலமைச்சர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினை மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களின் பணி மக்கள் நலன் காக்கும் அறப்பணி ஆகும். ஆங்கி லத்தில் ஒரு மேற்கோள் உண்டு. 'Adminis trative Professionals are the backbone of any organization, seamlessly managing the day-to-day operations and enabling success' என்ற கூற்றிற்கிணங்க, சுமார் 8.5 கோடி மக்களுக்கு, நமது திராவிட மாடல் அர சின் பல்வேறு நலத் திட்டங்களைக் கொண்டு சேர்க்கும் அரிய பணிகளை சுமார் 9 இலட்சம் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் செய்து வருகிறார்கள். அத்தகைய அரசுப் பணியாளர்களின் நிர் வாகத் திறன்மேல் சிறப்புக் கவனம் செலுத்துவதற்காக உருவாக்கப்பட்டதே மனிதவள மேலாண்மைத்துறையாகும்.

அரசுத் துறைகளில் உள்ள பணியா ளர்களின் எண்ணிக்கையை முன்கூட்டியே கணித்தல், மனிதவளம் தொடர்புடைய வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுதல், அரசுப் பணிக்கான உரிய நபர்களைத் தேர்ந்தெடுத்தல், பயிற்சி அளித்தல், பதவி உயர்வு வழங்குதல் போன்றவை மனிதவள மேலாண்மைத் துறையின் முக்கியப் பணிகளாகும்.

அரசு ஊழியர்களுக்கு குழு அமைக்கப்பட்டுள்ளது!

மாறிவரும் அரசுப் பணிகளின் சூழ்நி லைகளைக் கருத்தில்கொண்டு, அரசு ஊழியர்கள் தொடர்புடைய விதிகளை எளிமைப்படுத்துவதும், நெறிப்படுத்துவ தும் அவசியமாகிறது. எனவே, அரசு ஊழியர்களின் அடிப்படை விதிகள், அரசு அலுவலர் நடைமுறைகள், சிறப்பு விதி கள், விடுப்பு விதிகள் போன்றவற்றை எளிமையாக்கி, மறுவெளியீடு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டு தொடர் நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

'மகத்தான மனித வளம்; அதன்மூ லம் மக்கள் நலம்' என்பதை குறிக்கோ ளாகக் கொண்டு இயங்கிவரும் மனித வள மேலாண்மைத் துறையின்கீழ், அண்ணா நிருவாகப் பணியாளர் கல் லூரி, 'அ' மற்றும் 'ஆ' தொகுதி அலுவலர் களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலை யம், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம், அகில இந்திய குடி மைப் பணிகள் பயிற்சி மையம் மற்றும் போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையங் கள் போன்றவை செயல்படுகின்றன.

அரசு அலுவலர்களுக்கான பயிற்சி!

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல் லூரியின் மண்டலப் பயிற்சி நிலையங் களுக்கு அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப் படுகின்றன. இப்பயிற்சி மையத்தில் 2021 முதல் 2025 வரை 'அ' பிரிவு அலு வலர்கள் 417 பேருக்கும், 'ஆ' பிரிவு அலு வலர்கள் 1,352 பேருக்கும் பயிற்சி அளிக் கப்பட்டுள்ளது.

அரசு அலுவலர்கள்மீது மிகுந்த அக் கறை கொண்ட முதல்வர் அவர்களால் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி யின்மூலம் இதுவரை பயிற்சி ஏதும் பெறாத தலைமையாசிரியர்கள், ஆசிரி யர்கள், விடுதிக் காப்பாளர்கள் உள்ளடங் கிய அனைத்துத் துறைகளைச் சார்ந்த பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கும் பொருட்டு, ரூபாய் 2 கோடி ஒதுக்கீடு செய் யப்பட்டு, 907 அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத் துறையைச் சார்ந்த 80 அலுவலர்களுக்கும், ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த 570 அலு வலர்களுக்கும், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையைச் சார்ந்த 476 அலுவலர்களுக்கும், உணவு மற்றும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த 1,831 அலுவலர்களுக்கும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் பயிற்சி வழங் கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மற்றும் நீதித் துறை அமைச்சுப் பணிகளுக்கு நேரடையாக வும், பதவி உயர்வின் மூலமாகவும் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியா ளர் மற்றும் உதவியாளர்களுக்கு அடிப் படை பயிற்சி அளிக்கும் நோக்குடன் ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் 1974 ஆம் ஆண்டில் ஒரு பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

2021 ஆம் ஆண்டில், அடிப்படை பயிற்சி முடிக்காத அரசு அலுவலர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததின் காரணமாக, எப்பொழுதும் அரசு ஊழி யர்களின் நலனில் அக்கறை கொண் டுள்ள முதலமைச்சர் அவர்களின் தலை மையிலான இவ்வரசு, பவானிசாகரில் மட்டும் நடைபெற்ற அடிப்படை பயிற் சியை பரவலாக்கி ஜூன் 2022 முதல் 9,200 அரசு ஊழியர்களுக்கு அவர்கள் பணிபுரியும் மாவட்டத்திலேயே தேவை யான அடிப்படை பயிற்சி வழங்கப்பட்டுள் ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித் துக்கொள்கிறேன்.

நான் முதல்வன் திட்டம்!

1966 ஆம் ஆண்டு பட்டியலினத் தைச் சார்ந்த பிரிவினருக்கும், 1971 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்ப டுத்தப்பட்ட பிரிவினருக்கும் சிறப்புப் பயிற்சி மையம் அமைக்கப்பட்டது. இவ் விரண்டு மையங்களும் ஒன்றிணைக் கப்பட்டு "அகில இந்திய குடிமைப் பணி கள் தேர்வு பயிற்சி மையம்" என்று பெயரிடப்பட்டு 2000 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. அகில இந்திய குடி மைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தால்

கள் மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் செங்கல்பட்டிலும் செயல்படுகி றது. 1-4-2024 முதல்

28-2-2025 வரை 21,023 அரசு அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்துள் ளது. இது முன்னர் எப்போதும் இல்லாத அளவில் கல்லூரியின் அதிகபட்ச சாத னையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

"பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை

வெரூஉம் புலிதாக் குறின்."

பெரியதும், கூரிய தந்தங்களையும் கொண்டதுமான யானை தகுந்த பயிற்சி இல்லாத காரணத்தால், புலியைக் கண்டு அஞ்சும் என்று பகர்ந்த வள்ளுவர், மற் றொரு குறளில்,

"சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்

பட்டுப்பா நீன்றுங் களிறு"

அதாவது, அதே யானைக்கு தகுந்த பயிற்சியினை வழங்கினால், போர்க் களத்தில் கூரிய அம்புகளால் தாக்குற்ற போதும், களிறாகி எதிரிப் படைகளை நிர் மூலமாக்கும் என்று பயிற்சியின் முக்கி யத்துவத்தைக் குறிப்பிடுகிறார். களிறு என்றால் போர் யானை என்ற பொருள் உண்டு.

'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படை பயிற்சி நிலையத்தில் மாநில அரசுத் துறைகளில் நேரடியாக நியமிக்கப்படும் மற்றும் பதவி உயர்வுபெறும் அலுவலர்க ளுக்கான ஆண்டுத் திட்ட அட்டவணையை வெளியிடுகிறது. 2025 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்ட அட்டவணை 14-11-2024 அன்றே வெளியிடப்பட்டது.

அனைத்துத் தேர்வுகளுக்கும், இணையதளம் வழியே விண்ணப்பிக்கும் வசதியுடன், இணைய வழியிலேயே சான் றிதழ் சரிபார்த்தல், பணி ஒதுக்கீட்டிற் கான கலந்தாய்வு, காலிப் பணியிடங்கள் குறித்த விவரங்கள் போன்ற வசதிகள் ஏற் படுத்தப்பட்டதன் விளைவாக தேர்வர்க ளுக்கு நேரும் பயணச் செலவும், கால விரயமும் தவிர்க்கப்பட்டுள்ளது. தேர்வு நடைமுறைகளில் வெளிப்படைத்தன் மையை உறுதிப்படுத்தும் விதமாக, 2024 ஆம் ஆண்டு முதல் தேர்வர்களுடைய விடைத்தாள்கள் தேர்வாணைய இணை யதளத்தில் வெளியிடப்படுகின்றன.

கடந்த பிப்ரவரி மாதம் முதல் கலந் தாய்வின்போது, தேர்வாணையத்தின் YouTube Channel மூலம் காலிப் பணியி டங்களின் விவரங்களை நேரடியாகத் தெரிந்துகொள்ளும் வசதி நடைமுறைப்ப டுத்தப்பட்டுள்ளது. TNPSC, TNUSRB, MRB, TRB போன்ற தேர்வு முகமைகள்மூலம் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வு கள் குறித்த விவரங்களை அறிந்து கொள் வதற்கும், விண்ணப்பத்தினை எளிதா கப் பதிவேற்றம் செய்யவும் ஒருங்கிணைந்த கைப்பேசி செயலி ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

மேலும், தெரிவுப் பணிகளை விரைவு படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டதன் விளைவாக, Group 1 முதன் மைத் தேர்வு முடிவுகள், தேர்வு முடிந்த 57 வேலை நாட்களிலும், Group 1 B முதன்மைத் தேர்வு முடிவுகள், தேர்வு முடிந்த 48 வேலை நாட்களிலும், ஒருங் கிணைந்த தொழில்நுட்பத் தேர்வு முடிவு கள் 77 வேலை நாட்களிலும் விரைவாக வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள் கிறேன்.

"நான் தோற்றுப்போகலாம்

அதன் பொருள் வெற்றி சாத்தியமற் றது என்பது அல்ல

எவரெஸ்ட் சிகரத்தில் ஏற முயன்று தோற்றவர்கள்

எத்தனையோ பேர் உண்டு.

ஆனால், இறுதியில் எவரெஸ்ட் சிகரம் வெல்லப்பட்டது.

சிரமங்களுக்குப் பிறகே சிறகுகள் விரியும்"

என்ற புரட்சியாளர் சேகுவாராவின் வைர வரிகளை நெஞ்சில் சுமந்து, தமிழக இளைஞர்களின் "அரசுப் பணி" என்ற கனவை நனவாக்க, முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் மார்ச் 2025 வரை, தமிழ்நாடு அரசுப் பணியா ளர் தேர்வாணையம் வாயிலாக 24,599 பணியிடங்களும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆசிரியர் தேர்வு வாரியம் வாயி லாக 8,616 பணியிடங்களும், (மேசை யைத் தட்டும் ஒலி) மருத்துவப் பணியா ளர் தேர்வு வாரியம் வாயிலாக 4,329 பணியிடங்களும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் வாயிலாக 19,472 பணி யிடங்களும், (மேசையைத் தட்டும் ஒலி) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை யின் வாயிலாக 279 பணியிடங்களும், (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் வாயிலாக 9,132 பணியிடங் களும், (மேசையைத் தட்டும் ஒலி) வரு வாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பாக 2,400 பணியிடங்க ளும் நிரப்பப்பட்டுள்ளன. கருணை அடிப் படையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக 2,730 பணியிடங்களும், பொதுச் சேவைத் துறைகளில் 4,568 பணியிடங் களும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் வாயிலாக 2,673 பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

அரசு துறையில் 1.56 இலட்சம் பேருக்கு பணி!

துணை முதலமைச்சர் அவர்களின் பெரும் முயற்சியின் காரணமாக, சர்வ தேச மற்றும் தேசிய அளவிலான விளை யாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 84 விளை யாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள் ளன. மேலும், TNPSC Group-4 மூலம் சுமார் 9,532 பணியிடங்களுக்கு கலந் தாய்வு நடத்தப்பட்டு, பணி ஆணைகள் வழங்கும் தருவாயில் உள்ளது. இத்து டன் சமூக நலன் மற்றும் மகளிர் உரி மைத் துறைமூலம் சுமார் 16,780 பணி யிடங்களும், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின்மூலம் 1,352 பணியிடங்களும், தமிழ்நாடு அர சுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூ லம் Group 1 மற்றும் 1A-ல் 72 பணியிடங் களும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்மூலம் சுமார் 2,104 பணியிடங்களும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்மூலம் சுமார் 3,353 பணியி டங்களும், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் சுமார் 7,535 பணியிடங்களும் சேர்த்து, மொத்தமாக 1,55,992 பணியி டங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தனியார் துறை நிறுவனங்களில் 2.50 இலட்சம் பேருக்கு வேலை!

அரசுத் துறைகளில் மட்டுமல்லாது, தமிழக இளைஞர்களின் திறன் மேம்பாட் டில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, முதலமைச்சர் அவர்க ளின் கனவு திட்டமான, நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக இதுவரை 41,38,000 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதன் காரண மாக, சுமார் 2,50,000 தமிழக இளை ஞர்களுக்கு தனியார் நிறுவனங்களால் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன்படி 7-10-2005 அன்று தமிழ் நாடு தகவல் ஆணையம் உருவாக்கிப் பட்டது. தற்போது, தகவல் பெறும் உரி மைச் சட்டத்தின்கீழான மனுக்களையும், மேல்முறையீட்டு மனுக்களையும், இணைய வழியில் கட்டணம் செலுத்திப் பெறுவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள் ளது. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்கள், சென்னையில் உள்ள மாநில தகவல் ஆணையத்திற்கு நேரடி யாக வருவதற்கு பதிலாக, அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைத்துள்ள தேசிய தகவல் மையத் தின் தொடர்புடன், காணொலி மூலமாக தினசரி விசாரணை மேற்கொள்ளும் வச தியினை 10-6-2024 முதல் தொடங்கி யுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு விழிப்புப்பணி ஆணையம்!

தமிழ்நாடு விழிப்புப்பணி ஆணை யம் 1965 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்டது. பொதுப் பணிகளில், ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட நிருவாக ரீதி யான பணிகளில் அரசுக்கு அறிவுரை வழங்குவதும், ஊழல் குறித்த ஒவ்வொரு இனங்களிலும் மேற்கொள்ளப்பட வேண் டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோ சனை வழங்குவதும் இவ்வாணையத் தின் பணியாகும். பொது நிருவாகத்தில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளைத் திறம்படக் கையாளும்பொருட்டு, முதன் முதலாக 1964-ல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்கம் ஏற்படுத்தப்பட் டது. இவ்வியக்ககத்தின்கீழ், மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்கள் மாநிலம் முழுவ தும் செயல்பட்டு வருகின்றன.

மாநில அரசிலும், உள்ளாட்சி அமைப் புகளிலும் பணிபுரிந்து வரும் அலுவலர் கள் மற்றும் பணியாளர்கள்மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்கத் தால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கு ஒழுங்கு நட வடிக்கைகள் தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்பட் டுள்ளன. இத்தீர்ப்பாயம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணையின்பொருட்டு, தேவைப்ப டும் சாட்சியங்களை விசாரிக்கவும், தொடர்புடைய ஆவணங்களைக் கோரு வதற்கான அதிகாரங்களைப் பெற்ற (Qua si Judicial) அமைப்பாகும்.

தலைவர் மற்றும் நான்கு உறுப்பி னர்களைக் கொண்ட தமிழ்நாடு லோக் ஆயுக்தா, ஒரு நீதிமுறை சார்புடைய அமைப்பாகும். இதன் நோக்கம் தூய் மையான நிர்வாகத்தையும், வெளிப்ப டைத் தன்மையையும், பொறுப்புணர் வையும், செம்மையான நிர்வாகத்தை யும் உறுதிப்படுத்துவதாகும். 2019 முதல் பிப்ரவரி 2025 வரை 737 புகார்கள் பெறப்பட்டு, 624 புகார்கள் தீர்வு செய்யப் பட்டுள்ளன.

கல்வி ஒன்றே எதிர்காலம்

கவலைகள் களைந்திடும் எக்காலம்

நிதிகள் இங்கே தடையானால்,

உயர்கல்வி என்பது கனவாகும்

ஒன்றியம் நிதியை தரமறுத்தாலும்,

தடைகள் செய்து "மொழி" திணித்திட்டாலும்

இருமொழிக் கொள்கை எங்கள் இத யம் என்பார்.

அடிபணிய மறுத்திடுவார் மாநில உரி மையின் மகத்துவம் அறிந்தவர்! மறுசீர மைப்பின் அபத்தம் தெரிந்தவர்! மாநில உரிமைக்கு பங்கமென்றால், "மாக்னா" எரிமலையாய் வெடித்திடுவார்! மாணவர் களோ, மகளிரோ, தொழிலாளர்களோ, விவசாயிகளோ, சிறுபான்மையினரோ, விளிம்புநிலை மக்களோ, இவர்களுக்கு திட்டங்கள் பல தீட்டி, திராவிட மாடல் ஆட் சியில், 'எல்லோர்க்கும் எல்லாமும்; அனைவருக்கும் அனைத்தும்' என்ற

தொடர்ச்சி IV ஆம் பக்கம்

சென்னையில் புதிய அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம்!

தமிழ்த்தாயின் தலைமகன், தமிழி னத்தின் விடிவெள்ளி, கழக சித்தாந்தத்தை உருவாக்கிய மேதை, வள்ளுவனாய் வாழ்ந்து, பெரியாராய் மறைந்த பார் போற்றும் தமிழினத்தின் ஒட்டுமொத்த அடையாளம் அறிவுலக மேதை பேரறி ஞர் பெருந்தகை அண்ணா அவர்களை வணங்குகிறேன்.

தமிழுக்குச் செம்மொழி, தமிழர் தம் வாழ்வின் பொன் ஒளி தடை பல தகர்த் திட்டு அமைத்திட்டார் புதிய வழி, மகளி ருக்கு சொத்துரிமை மாணாக்கர்க்கு கல்வி, உழவர்க்கு மின்சாரம், விளிம்பு நிலை மக்களுக்கோ கூடுதல் இட ஒதுக் கீடு இப்படி திட்டங்கள் பல தந்தார் பகுத்த றிவுப் பகலவனின் பாசறையில் வளர்ந் திட்ட ஞானச் சுடரொளி முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்களை நினைத்து வணங் குகிறேன்.

மாநில உரிமைகளை காத்த முதல்வர்!

மாநில சுயாட்சி எங்கள் உயிர் என் பார், திராவிடம் எங்கள் உணர்வென் பார், மக்களை காத்திடும் இலக்கோடு திட் டங்கள் பல தந்திட்டார். உரிமைத் தொகை, புதுமைப்பெண், தமிழ்ப் புதல் வன், காலை சிற்றுண்டி, உயர் கல்வி உரிமை இப்படி முன்னோடித் திட்டங்க ளை உருவாக்கி மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாய் மாநில உரிமை காத்திட் டார் எங்கள் தலைவர். உழைப்பிற்கே களைப்பு வழங்கும் முதலமைச்சர் அவர் களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சாதனைகள் பல புரிந்து, சரித்திரத்தில் இடம் பெற்று, தலைவர் கலைஞரின் படை வரிசையில் முன் வரிசை சிப்பா யாய் களம் புகுந்து, அரசியல் எதிரிக ளுக்கு சிம்ம சொப்பனமாய் விளங்கி வரும் கழகத்தின் சொத்து, நல்முத்து, இளைஞரணி செயலாளர், தலைவரின் 200 தொகுதி இலக்கினை எளிதாய் வென்றெடுக்கவிருக்கும் எங்கள் தளபதி யின் தளபதி துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

திருப்பூர் மாவட்டத்தில் என்னை அரவ ணைத்து, எனக்கு வழிகாட்டி, உறுது ணையாய் இருந்துவரும் கழக உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் மு. பெ. சாமிநாதன் அவர்களையும், துணைக்குத் துணையாய், தோன்றாத் தோழமையாய், இன்முகத்துடன் என்னை வழிநடத்திச் செல்லும் திருப்பூர் மாநகராட்சியின் 4-ம் மண்டலக் குழுத் தலைவரும், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளருமான இல. பத்மநா பன் அவர்களையும், என்னை இம்மா மன்றத்திற்கு அனுப்பி வைத்து, அழகு பார்த்த தாராபுரம் தொகுதியின் கழக உடன்பிறப்புகள், தோழமைக்கட்சியை சார்ந்த நண்பர்கள் மற்றும் தொகுதிவாழ் மக்கள் ஆகிய அனைவரையும் அன் போடு, நன்றியோடு நினைந்து வணங்கு கிறேன்.

ஊழல் தடுப்பு - கண்காணிப்பு இயக்ககத்திற்கான ஒரு உதவி மையம்!